**நாள் 23.01.2026** **CC 152/2019** **அ.சா. 1**

**பெயர் மாரிமுத்து த/பெ.வீரபாண்டி**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**எதிரிகள் தரப்பில்** 348 BNSS **ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் கு.வி**

(1) எனக்கும் எதிரி ஆலடியானுக்கும் மாட்டு வியாபாரம் சம்மந்தமாக பழக்கம். அவரிடம் இருந்து சம்பவத்திற்கு சுமார் 10 நாட்களுக்கு முன்பு 01.10.2018 ம் தேதி மாடு ரூ.50 ஆயிரத்திற்கு வாங்கினேன். ரூ.55 ஆயிரத்திற்கு வாங்கினேன் என்றும், சம்பவத்திற்கு மூன்று மாத்திற்கு முன்பு வாங்கினேன் என்றால் சரியல்ல. அதில் முன் தொகை ரூ.40 ஆயிரம் மாடு வாங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்பே கொடுத்தேன். மீதித் தொகையை ரூ.16 ஆயிரத்தை மாடு வாங்கும் போது கொடுத்தேன். மொத்தம் ரூ.56 ஆயிரம் ஆகும். உடையார்பாளையத்தைச் சேர்ந்த சுந்தரம் என்பவர் தான் பேசி முடித்தார். வழக்கு சம்பவத்தின் போது சுந்தரம் இருந்தார்.

(2) சம்பவம் நடந்ததாக சொல்லும் நாளில் காலை 07.30 மணி அளவில் ஆலடியான் தொலைபேசியில் பேசினாரா என்றால் இல்லை சுந்தரம் பேசினார். அப்போது நான் ஆலடியான் மற்றும் அவரது மனைவியை வீட்டிற்கு அழைத்தேனா என்றால் இல்லை சுந்தரம் ஆலடியான் மேலும் ரூ. 4 ஆயிரம் கேட்பதாக சொன்னார். சுந்தரம் என்னுடன் போன் பேசும் போது நான் எனது தோட்டத்தில் இருந்தேன். அந்த தோட்டம் எனது சொந்த தோட்டம் இல்லை குத்தகைக்கு பிடித்துள்ளேன். மாடு வாங்கிய பின்பு நானும், ஆலடியானும் சந்தித்து பேசிக்கொள்ளவில்லை. தோட்டத்திற்கு அருகில் சுமார் 400 அடிக்கு எந்த வீடும், தோட்டத்துச் சாளையும் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்தில் நான், எனது அம்மா, தங்கை அவரின் குழந்தை இருந்தோம். சுந்தரம் இருந்தாரா என்றால் எதிரிகள் மற்றும் சுந்தரம் ஒன்றாக்கத்தான் வந்தார்கள்.

(3) பேசிக்கொண்டிருந்த போது நான் 2ம் எதிரியை தள்ளிவிட்டேன் என்றால் சரியல்ல எனது தங்கையை தள்ளிவிட்டுவிட்டு அவர் பின்னால் சென்ற போது மாட்டிற்கு தண்ணீர் வைக்கும் தொட்டியில் விழுந்துவிட்டார். சம்பவ சமயத்தில் நான் மது

போதையில் இருந்தேன் என்றால் சரியல்ல. நான் 2ம் எதிரியை தள்ளிவிட்டு நிலைதடுமாறி கீழே விழுந்ததில் எனக்கு தலையில் அடிப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு பணம் கொடுக்கக்கூடாது என்பதற்காக நானாக கீழே விழுந்ததை எதிரிகள் அடித்ததாக பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டில் இருந்து மாட்டுச்சாளை எவ்வளவு துாரம் என்றால் எல்லாம் ஒன்றாகத்தான் உள்ளது அதற்குள் தான் குடியிருக்கிறேன்.

(4) போலீசார் நான் மருத்துவமனையில் இருந்த போது என்னிடம் விசாரித்தார்கள். மாலை 06.30 மணிக்கு உதவி ஆய்வாளர் விசாரித்தார். அதன் பின்பு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை. போலீசார் என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை நான் சொல்லச் சொல்ல எழுதினார்கள். போலீசார் என்ன எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். சம்பவம் முடிந்த பின்பு தான் வந்தார். சத்தம் கேட்டு தான் எனது அம்மா வெளியே வந்தாரா என்றால் இல்லை எல்லோரும் அங்கு தான் இருந்தோம். அந்த சமயத்தில் எனது அப்பா சுமார் 200 அடி துாரத்தில் தோட்டத்தில் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தார். நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் மேல் இருந்த முன் விரோதம் காரணமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.23 17:13:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்